# "மாரி வெள்ளம்".

மாரி வெள்ளத்தின் வரவை அறிவிக்க புரட்டாதி மாதத்திலேயே மழை பொழிய ஆரம்பித்துவிடும். காலபோக செற்செய்கைக்கு நிலத்தை உழுது தயாராக்க வேண்டிய கமக்காரருக்கு மழையின் வரவு மகிழ்ச்சியூட்டும். ஆனாலும் அது தொடர் மழையாகி வெள்ளம் தேங்குமானால் அவர்களுக்கும் மழை அலுப்பு ஊட்டும். ஆடி மழை தேடி உழு என்பது ஒரு முதுமொழி. அது அந்தக்காலம். காடுகள் அழிந்து இயற்கை மாற்றம் கண்ட இவ்வேளையில் பருவ மழையும் பெய்கிறது. மழைக் காலம் மாறி வர மனது கைக்கிறது.

யாழ்ப்பாண மண்ணை நெறிதவறாது ஆண்ட மன்னன் எல்லாளன் பற்றிய ஒரு கதை. அந்த நாட்களில் இரண்டாம் வகுப்பு பாலபோதினியில் அது ஒரு இணைப்பு. எல்லாளன் குடிமக்களின் குறையை எப்படி போக்குவதில் அக்கறை செலுத்தினான் என்பதற்கு அது ஒரு எடுத்துக் காட்டு. எல்லாள மன்னன் இராஜ்சியத்தில் ஒரு கோடைகாலம் ஒரு திடீர் மழை பெய்துவிட்டது. வீட்டு முற்றத்தில். தான் தினக்கூலியாக பெற்ற நெல்லை அவித்துக்காயப் போட்ட ஒரு வறிய கிழவியின் நெல் நனைந்து பழுதடைந்துவிட்டது. அடுத்த உணவுக்கு ஏதும் இல்லாத நிலை. கிழவி எல்லாள மன்னனிடம் முறையிடுகிறாள். மன்னன் தானியம் வழங்கி அவள் குறையை போக்கினாள். அத்தோடு நில்லாமல் ஒழுங்காக முன் அறிவிப்பு சமிக்சையோடு மும்மாரி பொழிய வேண்டுமென கடவுளை நோக்கி கடும் தவம் இருந்து அந்த வரத்தைப் பெற்றான் என்கிறது கதை.

கெடுப்பதும் கெட்டாரை உய்விக்க மாற்று வழிமுறை கொடுப்பதும் மழைதான் என்பது வள்ளுவன் வாக்கு. ஆனால் பணம் பாதாளம் வரையும் பாயும் என்பதுபோல் வடிகாலமைப்பு சிறப்பாக உள்ள ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் வெள்ளத்தின் அனர்த்தம் வெகு குறைவு. அண்மையில் லண்டன் சட்டன் பிரதேச சபைக்கு உட்பட்ட வெலிங்டன் புகையிரத நிலைய அருகே உள்ள பிரதான சாலையில் ஒரு காட்சி. இடைவிடாத இரு மணிநேர மழை. வடிகால் அமைப்பில் ஏற்பட்ட தடை காரணமாக சாலையின் மேம்பாலத்துக்கு கீழே நீர்த்தேக்கம். ஆழம் அறியாது ஓடிய கார் அரைப்பகுதி மூழ்கிய நிலை. அந்த நிலை ஒரு மணி நேரம்தான் நீடித்தது. வலுவான பம்புகள் நீரை வெளியேற்ற, வடிகால் சுத்திகரிப்பில் ஒரு குழு இறங்க ஒரு மணிநேரத்தில் சாலை நிலை வழமை.

## ஊரின் வாசம்

சுவாசிப்பவர்: **ப.வை. ஜெயபாலன்**

ஊரில் என்றால் இப்படியா? என்ற எண்ணம் எழ, ஏக்கம் நெஞ்சில் தேக்கம். எங்கள் மண்ணினை ஆண்டு வளத்தை உறிஞ்சி தம் நாடுகளை நவீன மயப்படுத்திய மேலை நாடுகளின் வளர்ச்சியின் உச்சம் ஒருபுறம், ஐம்பது ஆண்டுகளாகியும் வெள்ள வாய்க்கால்களும், குளங்களும் வெள்ளப் பெருக்கு வந்தால் இன்றும் உடைப்பெடுப்பும் கோலத்தில் எம் தாயகமும் மறுபுறம்.

விதைப்பு காலத்தில் வயலில் உழ முடியாத தொடர்மழை என்றால் சேற்று விதைப்புத்தான் மாற்று வழி. ஒவ்வொரு பாத்தி வரம்புக்குள்ளும் மழை நீரைத் தேக்கி, உழவு மிஷினால் அல்லது உழவு மாட்டால் சேற்றோடு நீரைக் கலக்கி உழுது ஏற்கனவே நீரில் ஊற வைத்து பின் மூடி முளையாக்கிய நெல்லை விதைக்கும் முறை. விதைத்தபின் நீர் வடிய முடியாதவாறு மழை தொடர்ந்தால் முளை நெல் அழுகும். மீண்டும் மறு விதைப்பு.

1984ம் ஆண்டு மாரிமழையைப்போல சிவராத்திரியை ஒட்டி தொடர் மழை. பெரு வெள்ளம் கிளிநொச்சியில் இரணைமடுக்குளம் உடைப்பெடுக்கும் அபாயம். கலிங்கு பாய கதவுகளைத் திறந்து குளத்து நீரை வெளியேற்ற வெள்ளம் வயல் எல்லாம் பெருகி ஓட அறுவடை கால நெற்கதிர்கள் உப்படைகள் சூடு வைக்கப்பட்டிருந்த நெற்குவைகள் எல்லாம் வெள்ளத்தில் அள்ளுண்டு போக, நான்கு ஐந்து மாத முதலீட்டையும் உழைப்பையும் விவசாயிகள் முற்றாக இழந்த கையறு நிலை. இதற்குள் குளக்கட்டில் ஏற்ப்பட்ட சிறு வெடிப்பால் குளமே உடைக்கும் அபாயம். ஊரே திரண்டு மண் சாக்குகளை அணையாக்கி உடைப்பை தடுத்து நிறுத்தியது.

வெள்ளப் பெருக்கால் அகதிகளாகும் நிலையை பள்ள நிலப்பரப்பில் வாழும் வறிய குடும்பங்கள் அடிக்கடி அடைந்தன. பாடசாலைகள்தான் தஞ்சம். உதவி அரசாங்க அதிபர் சிபாரிசுடன்வரும் அவியல் உணவுகள் அரை வயிற்றை நிரப்பும். வெள்ளம் வடிய வீடு திரும்பினாலும் அள்ளுண்டுபோன தட்டு முட்டு சாமான்களை மீண்டும் சேகரிக்க வேண்டிய நிலை.

**கெடுப்பதும் கெட்டாரை உய்விக்க மாற்று வழிமுறை கொடுப்பதும் மழைதான் என்பது வள்ளுவன் வாக்கு.**

எல்லைக் காணிவரம்பை வெட்டி அடுத்தவன் காணிக்குள் வெள்ளத்தை கடத்தும் அடிபாடுகளும் வெள்ள நாட்களில் அதிகம். பாம்பு, பூராண், மட்டத்தேள், கொடுக்கன், புலிநகச் சிலந்தி என்று மழை காலத்தை ஒட்டி வீடுகளிலும் குறிப்பாக முகட்டுக் கூரைகள் விறகுக் கட்டுகள் ஊடாக வெளிப்படும் விஷ ஜந்துகளின் தொல்லையும் மிக அதிகம்.

மலகூடங்களே கட்டப்படாத குழிகளும் திறந்த வெளிகளும் மலங்கழிக்கும் இடமாகப் பயன்பட்ட அந்த நாட்களில் கிராமப்புறங்களில் வயிற்றோட்டம் உட்பட தொற்று நோய்களை குறிப்பாக காலில் ஏற்படும் சிரங்கு புண்களை கொண்டு வருவதில் வெள்ள நோய்க் கிருமிகளின் இயக்கம் மும்முரம் குச்சியால் தொட்டாலே சுருங்கும் சரக்குப் பூச்சிகள் அட்டைகள் என்பனவும் கையில் எடுத்து சிறுவர்கள் மகிழும் கம்பளப் பூச்சிகளும் நெருப்புப் பெட்டிகளில் ஓட்டைவைத்து அடைத்து பள்ளிப் பொடிகள்காற்சட்டைப் பைக்குள் கொண்டு திரியும் பொன் வண்டுகளும் மழைக்காலத்தின் வெளிப்பாடுகள்

அகதிகளுக்கு புகலிடமாக பயன்படும் பாடசாலைகளில் கூட வெள்ளத்தின் பாதிப்பு அதிகம். ஊர் நாய்களுக்கும் பாடசாலை கொட்டகைகளும் வாங்குகளுமே தஞ்சம். பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பத்து ஆண்டுகள் தொடர்ந்து வெற்றிக் கிண்ணத்தை தன தாக்கிய தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி மைதானம் கூட 1960வரை ஓர் வெள்ளம் தேங்கும் குளம் போன்ற பள்ளம்தான். நாற்புறமும் சூழ அமைந்த வகுப்பறைகளின் விளிம்பையும் தாண்டி வெள்ளம் நிற்கும். பாடசாலையும் வெள்ளத்தால் திடீர் விடுமுறை காணும். பத்துசத நன்கொடைச் சீட்டுகளை மாணவர்களுக் கூடாக விற்று, பல்லாயிரக் கணக்கில் பாரவண்டி நிரம்பிய மண்ணை கொண்டு வந்து பரவி புல் நட்டு நீர்ப் பாய்ச்சி முளைக்க வைத்துத்தான் அந்த மைதானத்தை ஒரு நல்ல பயிற்சி மைதானம் ஆக்கினார் அன்றைய அதிபர் ரி.ரி ஜெயரத்தினம்.

வெள்ளம் மழை என்றாலே பயன்பாடுகூடி பாணுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டுவிடும். விறகுகள் நீரில் ஊறி அடுப்பு மூட்ட முடியாத நிலையில் பாண்தானே தஞ்சம். வெள்ளம் நின்றால் மரவெள்ளிக்கிழங்கு நஞ்சு ஊறிவிடும் என்பதால், மரவெள்ளிக் கிழங்கு வெள்ள நாட்களில் தேடுவாரற்று மலிவான பொருளாகிவிடும். வெள்ளை அரிசிச் சோறும் கடல் தொழில் நடைபெறாத நாட்கள் என்பதால் கருவாட்டுக் குழம்பும் கிராமிய வீடுகளில் ஒரு நேர சமையலை நாளாந்தம் காண்பது அந்த நாட்களில் மழைக்காலத்தில்தான்.

இரவு இரவாக ரீங்காரம் இட்டு உடம்பைக் குத்தும் நுளம்பில் இருந்து தப்ப கொச்சி மட்டையோடு எரியும் வேப்பங் கொட்டையும், சாக்குபோன்ற தடித்த கம்பளிப் போர்வையும் கரிய இருளுக்குள் ஆங்கு ஈங்காக ஒளிரும் மின்மினிப் பூச்சிகளும் அந்த மழை இருள் அமைதியைக் கிழிக்கும் நத்தைகளின் கத்தலும் ஆந்தைகளின் அலறல்களுமாக மழை வாரிப் பொழியும் மாரி கால நினைவுகளும் ஆனந்தம் அளிப்பவைதான்.


**Do you run a business?**

**Do you employ staff?**

**Do members of public have access to your business premises?**

*Give **Ragarfield** Insurance Brokers a call to arrange a no obligation quotation for your business / property insurance and if you like the competitive rates we can arrange, you may qualify for free access to a lot of features advising you comprehensively on*

- **Health & Safety**
- **Risk Management**
- **Legal Expenses**

**Covers for shops and businesses can be arranged with excesses as low as**

**£50** for Glass Claims, for Money Claims, for Frozen Food Claims and for Goods in Transit Claims

Discounts are also available if you have the following

**Alarm, CCTV, Roller Shutters, Claims free experience, Staff living above the shop**

**ஆபத்து வருமுன் ஆவண செய்யுங்கள்!**

நீங்கள் ஏதும் வியாபாரம் செய்கின்றீர்களா? உங்கள் நிலையத்தில் பணியாளர்களை அமர்த்தியுள்ளீர்களா?

உங்களது ஸ்தாபன காப்புறுதித் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள். எமது சேவையினை ஏற்கும் பட்சத்தில் உங்கள் வியாபாரம் சம்பந்தமான கூடுதல் அறிவுரைகளை இனாமாகப் பெறுவதற்கு சாத்தியம் உண்டு.

உங்கள் அனைத்து காப்புறுதித் தேவைகளுக்கும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய 35 வருட அனுபவம் கொண்ட முறைக்கேற்றபடி தொழில் புரியும் (Professionlism ) நிபுணர்களாகிய எம்மை நாடுங்கள்.

பல முன்னணி காப்புறுதி நிறுவனங்களிடமிருந்தும் மிகக் குறைந்த கட்டணத்தில எங்கள் சகல காப்புறுதித் தேவைகளையும் பூர்த்திசெய்து கொள்ள அழையுங்கள்.

Most Trades are considered including the following

| | |
|---|---|
| **Supermarkets** | **Builders Merchants** |
| **Grocers** | **News Agents** |
| **Off Licenses** | **Boutiques** |
| **DIY & Hardware** | **Heating & Plumbing** |
| **Fish & Chips** | **Retail & Wholesale** |
| **Restaurants** | **Manufacturers** |
| **Clothing Retail** | **Wholesalers** |
| **Hairdressers** | **Production** |
| **Beauty Saloons** | **Distribution** |

**Need Van Insurance?**

We can arrange best available rates and also Protect your **No Claims Bonus** from 1 year onwards.

**Have 3 or more vehicles?**

We have access to exclusive motor fleet products and can arrange cover with any driver {17+ without any higher excesses} and many more features.

**Ragarfield** can source you great insurance products on excellent terms, to cover **EVERYTHING** that your business needs

We've been around for a While. For 35 years. So we have first rate relationships with leading insurers all over the marketplace.

இன்றே அழையுங்கள்.

Talk to us now…

Tel: **01474 32 88 88**

**Ragarfield Limited**
Insurance & Mortgage Brokers
31 Milton Road Gravesend Kent DA12 2RF
Authorized & Regulated by Financial Services Authority

***Your business insurance can also be extended to include the contents in the flat above if required***